# சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்

அனுப்புநர்

திரு பா இளங்கோ பிகாம் பிஎல்
தேவஸ்தானமேலாளர்,
99 அரண்மனை, சிவகங்கை
Ph 04575 241233
managersivagangaidevasthanam@gmail.com

பெறுநர்

இணை ஆணையர்,
இந்துசமயஅறநிலையத்துறை,
சிவகங்கை

ந க எண் D4 1190/2022 நாள் 09.07.2022

ஐயா,

பொருள்– சிவகங்கைசமஸ்தானம்தேவஸ்தானம், திருவெற்றியூர் அருள்மிகு வல்மீகநாதசுவாமி சமேத பாகம்பிரியாள்அம்மன் திருக்கோவில் பலவகை வருவாய் – குத்தகை இனங்கள் 1432ம் பசலிக்கு 22.07.2022 ந்தேதி மறுபொதுஏலம்/டெண்டர் நடத்துவது –சம்மந்தமாக

பார்வை–1.சிவகங்கை இந்துசமயஅறநிலையத்துறை இணைஆணையர் அலுவலக ந க எண் 1826/2022 அ3 நாள் 10.06.2022
2. சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் மேதகு பரம்பரைஅறங்காவலர்/ ராணி சாஹிபா அவர்கள் தீர்மானம் எண் 4124 நாள் 09.07.2022

---

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் திருவெற்றியூர் அருள்மிகு வல்மீகநாதசுவாமி சமேத பாகம்பிரியாள்அம்மன் திருக்கோவிலில் கீழ்க்கண்ட பலவகை வருவாய்தரும் குத்தகை இனங்களை 1432ம் பசலிக்கு (06.08.2022 முதல் 30.6.2023 வரை ) மட்டும் அனுபவித்துக்கொள்ளும் உரிமையினை ( பிரசாதம் விற்பனை உரிமம் 22.07.2022 முதல் 30.06.2023 வரை ) 22.07.2022ந்தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 12.00 மணியளவில் திருக்கோயில் அலுவலகத்தில் வைத்து மறுபொதுஏலம் /டெண்டர் நடத்த இந்துசமய அறநிலையத்துறை பரமக்குடி உதவிஆணையர் அவர்களை கலந்து நாள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | ஏல இனங்கள் | முன் மூன்று பசலிகளின் குத்தகைதொகை | | |
|---|---|---|---|---|
| | | பசலி 1429 | பசலி 1430 | பசலி 1431 |
| 1 | பிரார்த்தனை வெள்ளி கண்மலர் | 683000 | 375700 | 571000 |
| 2 | உபய உப்பு விற்பனை மற்றும் சேகரம் உரிமம் | 486200 | 262500 | 371000 |
| 3 | உபய முட்டை விற்பனை மற்றும் சேகரம் உரிமம் | 478500 | 258300 | 391500 |
| 4 | வேப்பிலை விற்பனை உரிமம் | 331100 | 182500 | 280000 |
| 5 | பிரசாதஸ்டால் வைத்து விற்பனை செய்யும் உரிமம் | 301101 | 151000 | 171696 திருக்கோயில் மூலம் வசூல் |

ஆகவே 22.07.2022 அன்று நடைபெறவிருக்கும் மறுபொதுஏலம்/டெண்டரில் பரமக்குடி இந்துசமய அறநிலையத்துறை உதவிஆணையர் அவர்கள் கலந்துகொள்ளதக்க உத்தரவு வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மறுபொதுஏலம்/ டெண்டர் நோட்டீசுகளில் ஒன்றினை இணைஆணையர் அலுவலக விளம்பர பலகையில் விளம்பரம் செய்திட பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/பா இளங்கோ
தேவஸ்தானமேலாளர்

/உ ந உ ப/

சிரஸ்தார் (பொ)

11/7/2022

# சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்
## 1432ம் பசலி மறுபொதுஏலம்/டெண்டர் அறிவிப்பு

ந க எண் D4 1190/2022 நாள் 09.07.2021

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் நிர்வாகத்திற்குட்பட்ட இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், திருவெற்றியூர் அருள்மிகு பாகம்பிரியாள் சமேத ஸ்ரீவல்மீகநாதசுவாமி திருக்கோவிலுக்குப்பாத்தியமான கீழ்க்கண்ட குத்தகைஇனங்களை 06.08.2022 முதல் 30.6.2023 முடிய ( பிரசாதம் விற்பனை செய்யும் உரிமம் – 22.07.2022 முதல் 30.06.2023 வரை ) 1432ம் பசலிக்கு அனுபவித்துக்கொள்ளும் உரிமையினை 22.07.2022ந்தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 12.00மணிக்கு மறுபொதுஏலம்/டெண்டர் திருக்கோயில் அலுவலகத்தில் வைத்து பரமக்குடி இந்துசமய அறநிலையத் துறை உதவிஆணையர் அவர்கள் முன்னிலையில் நடைபெறும்.

| வ.எண் | ஏல இனங்கள் | டிபாசிட் தொகை ரூ |
|---|---|---|
| 1 | பிரார்த்தனை வெள்ளி கண்மலர் | 300000 |
| 2 | உபய உப்பு விற்பனை மற்றும் சேகரம் உரிமம் | 200000 |
| 3 | உபய முட்டை விற்பனை மற்றும் சேகரம் உரிமம் | 200000 |
| 4 | வேப்பிலை விற்பனை உரிமம் | 150000 |
| 5 | பிரசாதம் விற்பனை உரிமம் | 100000 |

22.07.2022 ந்தேதி முற்பகல் 12.00 மணிக்கு மூடிமுத்திரையிட்ட டெண்டர்கள் சிவகங்கை தேவஸ்தானம் மேலாளரால் திறக்கப்படும்.

### மறுபொதுஏலம்/டெண்டர் நிபந்தனைகள்

1. வரிசை எண் 1 முதல் 5 வரை இனங்களுக்கு மட்டும் மறுபொதுஏலம்/டெண்டர் கேட்க விருப்ப முள்ளவர்கள் மேற்கண்ட ஏல இனங்களுக்கு, டிபாசிட் தொகைக்கு மேலாளர், சிவகங்கை தேவஸ்தானம் என முகவரியிட்டு வங்கிகேட்பு வரைவோலை ( டி டி ) மூலம் செலுத்தி ( சிவகங்கையில் மாற்றத்தக்கவகையில் ) அதற்கான ரசீதை டெண்டருடன் இணைத்து கொடுக்கவேண்டும். எக்காரணம் கொண்டும் ரொக்கமாக பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.
2. முன்பசலிகளின் குத்தகை பாக்கிதாரர்கள் டெண்டர்/பொதுஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக் கப்படமாட்டாது.
3. 22.07.2022 பகல் 11.30 மணி வரை டெண்டர் பெற்றுக்கொள்ளப்படும். முற்பகல் 12.00 மணிக்கு வரிசை எண் 1 முதல் 5 வரைஉள்ள இனங்களுக்கு சிவகங்கை இந்துசமய அறநிலையத்துறை உதவிஆணையர் அவர்கள் முன்னிலையில் மறுடெண்டர்/ பொது ஏலம் நடத்தப்படும்.
4. டெண்டர்தாரர்கள் டெண்டரில் குறிப்பிடும் தொகையினை எண்ணாலும் எழுத்தாலும் அடித்தல் திருத்தம் இல்லாமல் எழுதி கையொப்பம் மற்றும் தேதியிடல்வேண்டும். முன்னதாக திருக்கோயில் அலுவலகத்தில் ரூ 100 செலுத்தி டெண்டர் பாரம் 11.07.2022 முதல் 22.07.2022 தேதிவரை முற்பகல் 11.00 மணி வரை சரகஅலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
5. ஏலத்தில் உயர்ந்த கேள்விக்குப்பின் டெண்டர்தாரர்கள் முன்னிலையில் மறுடெண்டர்கள் திறக்கப்படும். மறுபொதுஏலம்/டெண்டரில் உயர்ந்த கேள்வியாக கேட்கப்பட்ட கேள்விதாரர் களுக்கு சென்னை இந்துசமயஅறநிலையத்துறை ஆணையர்அவர்களின் ரத்து அங்கீகாரத் திற்கு உட்பட்டு டெண்டர்/பொதுஏலம் குத்தகை உரிமை முடிவு செய்யப்படும்.
6. உயர்ந்தகேள்விதாரர் மறுடெண்டர்/ஏலத்தொகை முழுவதையும் உடன் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும்.

7. உயர்ந்த கேள்விதாரர் 6ல் கண்ட நிபந்தனையின்படி ஏலத்தொகை செலுத்த தவறினால் மறுஏலம்/டெண்டர் நடத்தப்படும். அவ்விதம் நடத்தப்படும் மறுடெண்டர்/பொதுஏலம் குறைந்த தொகைக்கு சென்றால் டிபாசிட்தொகையை இழப்பதுடன் நிர்வாகத்திற்கு ஏற்படும் சகல நஷ்டத்திற்கும் முன்டெண்டர்தாரர் / ஏலதாரரிடம் வசூலிக்கப்படும். லாபம் ஏற்பட்டால் அதில் உரிமைகிடையாது.
8. மறுடெண்டர்/பொதுஏலம் 1432ம் பசலிக்கு 06.08.2022 முதல் 30.6.2023 முடிய உள்ள காலத்திற்கு மட்டும். ( பிரசாதம் விற்பனை செய்யும் உரிமை மட்டும் 22.07.2022 முதல் 30.06.2023 வரை )
9. மறுடெண்டர்/பொதுஏலத்தை எவ்வித காரணமும் தெரிவிக்காமல் ஒத்திவைக்கவோ, ரத்து செய்யவோ ஏலம் நடத்தும் அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.
10. மறுடெண்டர்/பொதுஏலம் சென்னை இந்துசமயஅறநிலையத்துறை ஆணையர் அவர்களின் ரத்து அதிகாரத்திற்குட்பட்டது.
11. மறுடெண்டர்/பொதுஏலம் உறுதி செய்து உத்தரவு பெற்றவுடன் டெண்டர்தாரர்/பொது ஏலதாரர் தனது சொந்தச்செலவில் 10 தினங்களுக்குள் ரூ 50/– மதிப்புள்ள முத்திரை தாளில் ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுக்கவேண்டும். தவறினால் டெண்டர்/பொதுஏலம் நடத்தி அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு நிபந்தனை 7ல் கண்டபடி டெண்டர்தாரர்/ ஏலதாரர் பொறுப்பாக்கப்படும். டெண்டர்/ஏல நிபந்தனைகளை கூட்டவோ குறைக்கவோ மாற்றம் செய்யவோ டெண்டர்/ஏலம் நடத்தும் அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.
12. மறுபொதுஏலம்/டெண்டரில் கலந்து கொள்பவர்கள் ஏலம் நிபந்தனைகளை தெரிந்தே கலந்து கொண்டதாக கருதப்படும்.
13. உரிமம் குத்தகைகளை இந்துசமயத்தினர் மட்டுமே ஏல/டெண்டர் எடுக்க அனுமதிக்கப்படுவர்.
14. ஷ திருக்கோயிலுக்கு பாக்கி செலுத்தவேண்டியவர்கள் கோயிலுக்கு எதிராக வழக்கு நடத்தியவர்கள் மற்றும் நடத்துபவர்கள் அவர்களின் உறவினர்கள் கோயிலின் நன்மைக்கு புறம்பாக செயல்படுபவர்கள் அல்லது மேலேகண்ட வகையினருக்காக பினாமியாக கேட்பவர் என திருக்கோயில் நிர்வாகிகளால் கருதப்படுபவர்கள், ,மற்றும் 21 வயது நிறைவுபெறாதவர்கள் ஏலம்/டெண்டர் கேட்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.
15. விற்பனை செய்யுமிடத்தில் குத்தகைதாரர் தனது சொந்தச்செலவில் குத்தகை இனம், குத்தகை தொகை, குத்தகைதாரர் பெயர், முகவரி மற்றும் குத்தகை எடுத்த இனங்களின் விற்பனை செய்யப்படும் விலைப்பட்டியல் எழுதி போர்டு வைக்கப்படவேண்டும்.
16. குத்தகைதாரர் தேவஸ்தானத்தில் நிர்ணயம் செய்யப்படும் விலைக்குமேல் விற்பனை செய்யக்கூடாது.
17. உபய உப்பு சேகரத்தில் தேவஸ்தான பங்கு மட்டும் சேகரிக்கவேண்டியது.
18. ரூ 30,000/–க்கு மேல் குத்தகை எடுக்கும் குத்தகைதாரர்கள் 1% GST வருமான வரி செலுத்திடவேண்டும்.
19. பொதுஏலம்/டெண்டரில் கலந்துகொள்பவர்கள் ஆதார் கார்டு, பான் கார்டு நகல்கள் இணைக்கவேண்டும்.

<u>பிரசாதங்கள் தயாரித்து விற்பனை செய்யும் நிபந்தனைகள்</u>

தினசரி தயார் செய்யும் பிரசாதங்களை பாதுகாப்பான முறையில் சுகாதார முறைப்படி பொட்டலமாகவோ அல்லது கவர்களில் வைத்து விற்பனை செய்யவேண்டும்.

1. பிரசாதங்கள் சுத்தமான கலப்பிடமில்லாத தரமான பொருட்களை கொண்டு தயாரிக்க வேண்டும்.
2. பிரசாதம் தயாரிப்பவர் மற்றும் விற்பனை செய்யும் பணியாளர்கள் இந்து மதத்தைசேர்ந்தவ ராகவும் ஆரோக்கியமானவராகவும், சுத்தமானவராகவும் இருக்கவேண்டும்.
3. தினசரி தயாரிக்கப்படும் பிரசாதங்கள் குறித்த அறிவிப்பு பட்டியலும் விலைப்பட்டியலும் எல்லோர் பார்வைக்கும் தெரியும்இடத்தில் வைத்திருக்கவேண்டும். பாலிதீன்பைகள் ( கவர்) பயன்படுத்த கூடாது.

4. பிரசாதங்கள் தயாரிக்கப்படுவதையும் விற்பனை செய்யப்படுவதையும் கண்காணிக்க ஆலய நிர்வாகத்தினருக்கு அதிகாரம் உண்டு. பொதுமக்களிடமிருந்து புகார் ஏதும் ஏற்படாவண்ணம் எல்லா ஏற்பாடுகளையும் ஏலம்/டெண்டர் எடுப்பவர் செய்துகொள்ளவேண்டும்.
5. பிரசாதம் தயார் செய்ய பித்தளை பாத்திரங்கள் பயன்படுத்தப்பட்டால் 3 மாதங்களுக்கு ஒருமுறை யாவது ஈயம் பூசி நல்லமுறையில் வைத்துக்கொள்ளவேண்டும்.
6. பிரசாதம் தயாரிப்பவர் (ஏலம்/டெண்டர் எடுத்தவர்) தான் சொந்தப்பொறுப்பில் பிரசாதங்கள் தயாரிக்கப்படும் சாமான்களையும் பாத்திரங்களையும் தங்களது பாதுகாப்பில் வைத்துக் கொள்ளவேண்டும். இதில் ஏற்படும் குறைபாடுகளுக்கு திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பல்ல.
7. ஏலதாரர் அறிவிப்பில் கண்ட பிரசாதங்களை தவிர வேறு பிரசாதங்களை தயாரித்து விற்பனை செய்யவேண்டுமானால் எழுத்து மூலம் அலுவலகத்திற்கு மனுச்செய்து தலைமை அலுவலகம் அனுமதி பெற்றபின் ஏற்பாடு செய்யவேண்டும்.
8. பிரசாத ஸ்டால் விற்பனை செய்யும் இடத்தில் எரியும் மின்விளக்கிற்கு மாதம் 1க்கு மின்கட்டணமாக ரூ 150/– திருக்கோயிலுக்குச்செலுத்தவேண்டும்.
9. பிரசாதம் தயாரித்து விற்பவர்கள் தேவஸ்தானம் குறிப்பிடும் இடத்தில் தயாரித்து குறிப்பிடும் இடத்தில் மட்டும் விற்பனை செய்யவேண்டும்.
10. ஆலய உபயதாரர்களுக்காக தயாரிக்கப்படும் பூஜை பிரசாதங்களுக்கு ஏலதார் /டெண்டர்தார் உரிமைஏதும் கேட்க ஆட்சேபனை செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.
11. தினசரி தயாரிக்கப்படும் பதார்த்தங்களில் ஒரு செட் எல்லாவகையான பிரசாதங்களையும் ஆலய அலுவலகத்திற்கு சோதனைக்காக இலவசமாக கொடுக்கப்படவேண்டும்.
12. பிரசாதங்கள் குறிப்பிட்ட எடை அளவுக்கு குறைவதாகவும், தரம் குறைவானதாகவும் இருந்தால் விற்பனை உடன் நிறுத்துவதுடன், ஏல/டெண்டர் விற்பனை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
13. ஷ பிரசாத ஸ்டால் விற்பனை செய்யும் உரிமம் பெற்றவர் தமிழ்நாடு உணவு பாதுகாப்புத் துறையில் பதிவு செய்து பதிவுசான்று பெற்றுக்கொள்ளவேண்டும்.

இந்துசமயஅறநிலையத்துறை சென்னை ஆணையர் அலுவலக சுற்றறிக்கை ந க எண் 10163/2016 யு4 நாள் 07.03.2016ன்படி குத்தகைதார் விற்பனை செய்யப்படவேண்டும்.

| வ.எண் | பிரசாதத்தின் பெயர் | எடை | விற்பனை விலை |
|---|---|---|---|
| 1 | லட்டு | 50 கிராம் | 10.00 |
| 2 | முருக்கு | 50 கிராம் | 10.00 |
| 3 | அதிரசம் | 50 கிராம் | 10.00 |
| 4 | சக்கரைபொங்கல் | 100 கிராம் | 10.00 |
| 5 | புளியோதரை | 100 கிராம் | 10.00 |
| 6 | தேன்குழல் | 50 கிராம் | 10.00 |
| 7 | மிளகுவடை | 50 கிராம் | 10.00 |
| 8 | கற்கண்டு | 50 கிராம் | 10.00 |
| 9 | மிளகுதட்டை | 50 கிராம் | 10.00 |
| 10 | புட்டமுது | 50 கிராம் | 10.00 |
| 11 | வெண்பொங்கல் | 100கிராம் | 10.00 |
| 12 | தயிர்சாதம் | 100 கிராம் | 10.00 |
| 13 | அப்பம் | 50 கிராம் | 10.00 |
| 14 | தினைமாவு | 50 கிராம் | 10.00 |

ஓம்/ பா இளங்கோ
தேவஸ்தானமேலாளர்

/உ ந உ ப/

சிரஸ்தார் (பொ)

11/7/22

11/7/2022